[2017 ஜனவரி 27

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 1, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ராஜேந்திரன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

1—

பறவைகள் சரணாலயம்

*5570—**திரு. சு. ராஜேந்திரன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரியலூர் தொகுதி, திருமானூர் ஒன்றியம், கரைவெட்டியிலுள்ள பறவைகள் சரணாலயத்தை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) ஆம்.

(ஆ) அரியலூர் தொகுதி, திருமானூர் ஒன்றியம், கரைவெட்டியிலுள்ள பறவைகள் சரணாலயத்தை மேம்படுத்த அரசு உரிய நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ராஜேந்திரன் அவர்கள்.*

திரு. சு. ராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களின் இதயம் என்ற கோயிலிலே தெய்வம் என்ற வடிவினிலே நாளும் வாழும் மாண்புமிகு அம்மா*

2017 ஜனவரி 27]

அவர்களின் அரசின்மூலம் அரியலூர் தொகுதி, திருமானூர் ஒன்றியம், அரியலூர் தாலுகாவுக்கு உட்பட்ட கரைவெட்டி பறவைகள் சரணாலயத்திற்கு ஏற்கெனவே எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது, என்னென்ன பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூர் தாலுகாவுக்கு உட்பட்ட கரைவெட்டி பறவைகள் சரணாலயம் 453.71 ஹெக்டேர் பரப்பளவில் வன உயிரினப் பாதுகாப்புச் சட்டம் 1972, பிரிவு 18 (1)–ன்கீழ் உருவாக்கப்பட்டது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய முயற்சியின் பயனாக 2012–2013 ஆம் ஆண்டு ரூ.39.04 இலட்சமும், 2013–2014 ஆம் ஆண்டு ரூ.6.92 இலட்சமும், 2014–2015 ஆம் ஆண்டு ரூ.26.56 இலட்சமும், இச்சரணாலயத்தின் மேம்பாட்டிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு, சரணாலயத்தில் வளர்ந்துள்ள தேவையற்ற வேற்றுமரங்கள், புதர்கள், நீர்வழித் தடங்களில் இடையூறாக உள்ள செடி, கொடிகள் ஆகியவற்றை அகற்றுதல் மற்றும் பறவைகள் சரணாலய ஏரியில் அதிக அளவில் நீரினைச் சேகரிக்கும்பொருட்டு ஏரியைத் தூர் வாரி ஆழப்படுத்துதல் போன்ற பணிகளோடு, செயல் விளக்கக்கூடம், சுற்றுலாப் பயணிகளுக்குக் குடிநீர் வசதி செய்து தருதல் போன்ற பணிகளும் மேற்கொள்ளப்பட்டுவிட்டன. மேலும், இச்சரணாலயத்தில் உள்ள பறவைகளைப் பாதுகாப்பதற்கு வேட்டைத் தடுப்புக் காவலர்கள் பணியமர்த்தப்பட்டு பணியாற்றி வருகின்றனர். அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட மேம்பாட்டுப் பணிகள் காரணமாக இப்பறவைகள் சரணாலயம் பல்வேறு விதமான வெளிநாட்டுப் பறவைகள் நிலம் மற்றும் நீர்ப் பறவைகள் வந்து வாழ்வதற்கு உகந்த இடமாக அமைந்துள்ளதால் பறவைகளின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடமும் அதிகரித்து வருகிறது. மேலும், ஏற்கெனவே ஒப்பளிப்பு செய்யப்பட்ட ரூ.6.14 இலட்சம் நிதிக்கான பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

[2017 ஜனவரி 27

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. ராஜேந்திரன் அவர்கள்.*

திரு. சு. ராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சார்ந்திருக்கும் அரியலூர் தொகுதி மக்களுக்கும், அரியலூர் மாவட்ட மக்களுக்கும் மட்டுமல்லாது, உலகெங்கிலிருந்தும் பறந்து வருகின்ற பறவைகளும் மகிழ்கின்ற வகையில் நடவடிக்கை எடுத்துள்ள மாண்புமிகு அம்மா அவர்களின் அரசின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக எனது நன்றியைத் தெரிவித்து, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள்.*

திரு. டி.ஆர்.பி. ராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பெருமை வாய்ந்த மன்னார்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வடுவூர் பறவைகள் சரணாலயம் ஏறத்தாழ 128 ஹெக்டேர் பரப்பளவில் அமைந்துள்ளது. இங்கே 52 வகையான வெளிநாட்டுப் பறவைகளும், 30 வகையான உள்நாட்டுப் பறவைகளும், மொத்தம் 82 வகையான பறவைகள் அங்கே வந்து செல்கின்றன. அங்குள்ள ஏரியில் நீர்மட்டம் 2 மீட்டராக இருக்க வேண்டும். ஆனால், தற்போது நீர்மட்டம் முழங்கால் அளவிற்குத்தான் இருக்கிறது. பறவைகள் சரணாலயம் அமைந்திருக்கும் இந்த ஏரியானது அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகளுக்கும் மிகப் பெரிய நீராதாரமாகத் திகழ்ந்துவருகிறது. ஏற்கெனவே, இரண்டு முறை இதே அவையில் நான் இதுகுறித்து கேள்விகளை எழுப்பியுள்ளேன். சமீபத்தில்* CAMPA Fund*–லிருந்து ரூ.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து, அதன்மூலம் சிறிய, சிறிய வேலைகளை மட்டும்தான் செய்திருக்கிறார்கள். ஏரியின் கொள்ளளவை அதிகரித்து, ஏறத்தாழ ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களுக்கு நீராதாரமாகத் திகழும் இந்த ஏரியைச் சீரமைக்க ரூ.2 கோடிக்கான திட்டம் வகுக்கப்பட்டு, அதை* PCCF*–க்கு அனுப்பியிருக்கிறார்கள். ஆனால், ஏதோ காரணங்களுக்காக அத்திட்டத்தை நிராகரித்திருக்கிறார்கள். தயவுசெய்து நீங்கள் இதில் கவனம் செலுத்தி, அங்குள்ள விவசாயப் பெருங்குடி*

2017 ஜனவரி 27]

மக்களுக்காகவும், பறவைகள் சரணாலயத்திற்காகவும் உதவிட அந்த ஏரியை 2 மீட்டர் அளவுக்கு ஆழப்படுத்த வேண்டும். 50 ஹெக்டேருக்கு ஆழப்படுத்தினால்கூட போதுமானது. ஏறத்தாழ 10 இலட்சம் கியூபிக் மீட்டர் அளவிற்கு தண்ணீர் அங்கு இருக்கும். சமீபத்தில்கூட அங்குள்ள இளைஞர்கள் ஒன்றுகூடி இது தொடர்பாக ஓர் ஆர்ப்பாட்டத்தை நடத்தினார்கள். நானும் தொடர்ந்து இந்த அவையில் இந்தக் கேள்வியை எழுப்பிக்கொண்டே வருகிறேன். ஆகவே, தயைகூர்ந்து இதன் முக்கியத்துவத்தைப் புரிந்துகொண்டு, இந்த அரசு உடனடியாக இதில் கவனம் செலுத்தி, உடனடியாக ஏரியின் ஆழத்தை அதிகப்படுத்தி, அங்கிருக்கும் பறவைகளையும், விவசாயிகளையும் காப்பாற்ற வேண்டும் என்று கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த ஏரிக்காக அவர்கள் வாயிலாகவே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, வேலைகள் நடந்துவருகின்றன என்ற மகிழ்ச்சியான செய்தியைச் சொல்லியிருக்கிறார்கள். மேலும் பல தகவல்களைக் கொடுத்திருக்கிறார்கள். இதுகுறித்து, நிதி ஆதாரத்திற்கேற்ப அரசால் பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி அவர்கள்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டன்சத்திரம் தொகுதிக்குட்பட்ட மேற்குத் தொடர்ச்சி மலையில் அமைந்துள்ள வடகாடு ஊராட்சிப் பகுதியானது மலைப் பகுதியில் அமைந்திருக்கிறது. அங்கு பெத்தேல்புரத்தில், சிறுவாட்டுக்கோம்பை என்ற கிராமம் இருக்கிறது. அங்கு அதிகமாக மலைச் சாதியின மக்கள்தான் வசித்துவருகிறார்கள். அந்தப் பகுதிக்கு பல ஆண்டுகளாக தார்ச் சாலை வசதி இல்லாமல் இருந்தது. 2006 ஆம் ஆண்டு அந்தப் பகுதியில் தார்ச் சாலை அமைத்துக் கொடுத்தோம். ஏனென்றால், அங்கே வசிக்கின்ற மக்கள் ஏதாவது அவசர சிகிச்சைக்காகவோ

அல்லது பொருட்கள் வாங்க வேண்டுமென்றாலோ மிகவும் சிரமப்பட்டார்கள். பேறு காலங்களில்கூட டோலி கட்டி அப்பெண்களை அழைத்து வந்தார்கள். எனவே, அங்கு வனத் துறையின் மூலமாகவே திருச்சி மாவட்டத்திலுள்ள பொறியியல் துறையின் உதவியுடன் தார்ச் சாலை அமைக்கப்பட்டது. தற்போது அந்த தார்ச் சாலை பழுதடைந்துவிட்டது. எனவே, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு அந்தச் சாலையைச் சீரமைப்பதற்கு போதுமான நிதி ஒதுக்கி, வனத் துறையின் மூலமாகவே அதைச் செப்பனிட முன்வருவார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த வனச் சாலையை பழுது நீக்கி, அங்குள்ள பிரச்சினைகள் நிதி ஆதாரத்திற்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.*

முற்பகல் 10—10

திரு. டி. செங்குட்டுவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான செய்தியை இந்த அரசினுடைய கவனத்தை ஈர்ப்பதற்காக ஒரு கேள்வியாகக் கேட்டிருக்கிறேன். கர்நாடக மாநிலம், பன்னார்கட்டாவிலிருந்து யானைகள் கூட்டம்கூட்டமாக கிருஷ்ணகிரி மாவட்டத்திற்குள் நுழைகின்றன. 50 முதல் 100 யானைகள் வரை கூட்டம்கூட்டமாக நுழைந்து அங்குள்ள விவசாயப் பெருங்குடி மக்களின் விளைநிலங்களை நாசப்படுத்துகின்றன. மீண்டும் மீண்டும் விவசாயிகள் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகிறார்கள். அதுமட்டுமல்லாமல், உயிர்ச் சேதங்கள் ஏற்படுகின்றன. ஏதோ வனத் துறை அலுவலர்கள் முயன்று, அவ்வப்போது அந்த யானைகளைத் துரத்தினாலும்கூட, ஒரு பாதுகாப்பான இடமாக, தண்ணீர் வசதியுள்ள இடமாக இருக்கின்ற காரணத்தினால் பன்னார்கட்டாவில் இருந்து அந்த யானைகள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன. நாம் தருகிற அந்த நிவாரணத் தொகை போதாத நிலையில் இருக்கிறது. ஆகவே,*

2017 ஜனவரி 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சரை நான் கேட்டுக்கொள்வது எல்லாம் அங்கே சானமாவு என்ற ஒரு காடு இருக்கிறது. அந்த காட்டிலே ஒரு சரணாலயத்தை அமைத்துத் தந்து, அங்கு வருகின்ற விலங்குகளை அந்தச் சரணாலயத்திலேயே இருக்க வைத்து, அங்கேயே தேவையான தண்ணீரையும், அதற்குத் தேவையான உணவுகளையும் அளித்து உதவினால், அந்த விவசாயப் பயிர்கள் பாதுகாக்கப்படும். உயிர்ச் சேதங்கள் தடுக்கப்படும். ஆகவே, அந்தத் திட்டம் இந்த அரசின் செயற்குறிப்பில் இருக்கிறதா என்பதை நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்வி பறவைகள் சரணாலயத்தைப் பற்றியது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வனத் துறைக்கு சம்பந்தப்பட்ட யானைகளைப் பற்றி கேள்வி கேட்டிருக்கிறார். இப்பொழுது இருக்கிற வறட்சியின் காரணமாக, தண்ணீர் பற்றாக்குறையின் காரணமாக, யானைகள் உட்பட அத்தனை விலங்குகளும் தண்ணீரைத் தேடி போகின்றபோது, அவர் சொல்கின்ற விபத்துகள் ஏற்படுகின்றன என்பதை அறிகிறோம். இப்பொழுது நடந்த இந்த வறட்சி நிவாரணப் பணியின் மூலமாக யானைகள் வராமல் தடுப்பதற்கு உள்ள அகழிகள், அவற்றிற்கு தண்ணீர் தருவதற்கு உள்ள நிலைகள், நிலத்தடி நீர் இருக்கிற இடம் ஆகியவற்றை ஆராய்ந்து அங்கிருந்து பைப் மூலமாக விலங்குகள் வசிக்கின்ற பகுதிக்கு தண்ணீரைத் தருகின்ற பணிக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பிரச்சினையை நிதி ஆதாரங்களுக்கேற்ப இந்த அரசு பரிசீலிக்கும் என்கிற உறுதியை நான் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வர்தா புயலின்போது வேடந்தாங்கல் சரணாலயத்திலே பல மரங்கள் விழுந்துவிட்டன. அதனால் வெளிநாட்டுப் பறவைகள்

வந்து தங்குவதற்கு இப்பொழுது முழுமையான வசதிகள் இல்லாமல் இருக்கின்றன. ஆகவே, வேடந்தாங்கலிலே சாய்ந்த மரங்களுக்குப் பதிலாக புதிதாக மரக்கன்றுகளை நட்டு, அவை பராமரிக்கப்படுமா என்பதையும், வெளிநாட்டுப் பறவைகள் இரை தேடுவதற்கு வசதியாக அருகில் இருக்கின்ற ஏரிகளிலே புதிதாக மீன் குஞ்சுகளை விடுகின்ற பணிகளை அரசு செய்யுமா என்பதையும் அறிய விரும்புகிறேன். என்னுடைய தொகுதியிலே புதிய மன்னை என்ற இடத்திலே நேற்று தண்ணீரைத் தேடி வந்த ஐந்து மான்கள் கிணற்றிலே விழுந்து இறந்து போயிருக்கின்றன. ஆகவே, இன்றைக்கு வறட்சியின் காரணமாக அனைத்து வனங்களிலும் இருக்கின்ற விலங்குகள் மிக அதிக அளவிலே தண்ணீரைத் தேடி அலையக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. ஆகவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு, ஆங்காங்கு அவற்றிற்கு குடிதண்ணீர் வசதியை ஏற்படுத்தித் தரவும், வெளிநாட்டுப் பறவைகள் வருவதை நல்ல முறையில் பேணிக் காக்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த வேடந்தாங்கல் சரணாலயத்தைச் சீர் செய்வதற்கு வருடாவருடம் அரசு நிதியை ஒதுக்கியிருக்கிறது. 2015–2016 ஆம் வருடத்தில் அவர் கேட்ட கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு ரூ.7.55 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், அவர் குறிப்பிட்டிருக்கிற அந்த விவரங்களை எல்லாம் வாங்கி, அவை அரசின் நிதி ஆதாரத்தைப் பொறுத்து பரிசீலிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 2, மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக், மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*